## தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA10054/F/2023 & SA10507/F/2023**

திரு. அ.சக்திவேல் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வல்லம்,
விழுப்புரம் மாவட்டம் 604 206. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **24.02.2023** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **01.04.2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **05.06.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.அ.சக்திவேல் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ச.சுந்தரபாண்டியன், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், வல்லம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 24.02.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம், தளவானூர்

ஊராட்சியில் 26.03.2022 நாளிற்கு முன்பு வரை ஊராட்சி செயலராக பணி செய்த திருகு.கிருஷ்ணமூர்த்தி த/பெ குமாரசாமி என்பவரின் ஊராட்சி செயலர் பதவிக்கான கல்வித் தகுதியை உறுதிப்படுத்தும் கல்விச் சான்று, மதிப்பெண் பட்டியலின் சான்றிட்ட நகல்கள், பணியில் இணைந்த பின்பு இவருடைய கல்வி சான்றிதழ்களின் மீது சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டதற்கான நடவடிக்கை குறிப்பாவணங்களின் சான்றிட்ட நகல்கள் என்பது போன்ற தகவல்களை 2 இனங்களில் தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 24.03.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 01.04.2023 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 05.06.2023 மற்றும் 07.06.2023 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் மீது இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 12.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் மனுதாரர் தகவல் கோரும் திருகு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பணிப்பதிவேட்டினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்களில் தான் தனிநபர் ஆட்சேபணை கடிதம் வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் மீண்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 மூலம் தொடர்ந்து கேள்விகள் கேட்பது தவிர்க்கப்பட வேண்டும், என்றும், இல்லையேல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கும், காவல் துறை மூலமாகவும், மனுதாரரின் மீது வழக்கு தொடரப்படும் என தன்னை மிரட்டுவதாக ஆணையத்தில் தெரிவித்து அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த திரு.வீ.நாகராஜன், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், மற்றும் மனுதாரரை மிரட்டும் விதமாக 12.05.2023 நாளிட்டு கடிதம் அனுப்பிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மற்றும் மேல்முறையீட்டு அலுவலர், வல்லம் ஊராட்சி ஒன்றியம் ஆகியோர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல***

*விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.03.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA10054/F/2023 & SA10507/F/2023**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வல்லம்,
விழுப்புரம் மாவட்டம் 604 206.

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**

திரு. அ.சக்திவேல்,
117, பழைய பிள்ளையார் கோவில் தெரு,
தாவானூர் (ம) அஞ்சல்
செஞ்சி வட்டம்- 604 205
விழுப்புரம் மாவட்டம்.

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025